# அரசு பாதுகாப்பு தந்தால் மாகாண சபை கூடும்


பக்கங்கள் எட்டு — விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 ஒலி 65 செவ்வாய் 10-04-1990 (பங்குனி 28) ரமழான் 13


## சாம் தம்பிமுத்து

"இலங்கை அரசு பாதுகாப்புத் தந்தால் மட்டுமே நாம் மாகாணசபையை நடத்தக் கூடியதாக இருக்கும்" இவ்வாறு வடகிழக்கு மாகாணசபையின் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் அபுயூசுப்பும், ஈ. பி. ஆர். எல் எப். எம். பி சாம் தம்பிமுத்துவும் நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர். வட,கிழக்கு மாகாண சபையை வேறு எங்காவது கூட்டும் திட்டம் உண்டா என செய்தியாளர்கள் கேட்டபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். ஈ, பி. ஆர். எல், எப் இலங்கை அரசிடம் சமர்ப்பித்த பத்தொன்பது அம்சக் கோரிக்கை குறித்து அரசு எம்மை அழைத்துப் பேச வேண்டும். அந்தக் கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொள்ள ஒரு வருடம் — 8-ம் பக்கம் பார்க்க

# புலிகளின் குழு - ஹமீத் நேற்று பேச்சு

# மாத்தயா - ஜனாதிபதி இன்று சந்திப்பு

## ஆறுவது திருத்தச் சட்டமூலம் குறித்து முக்கிய முடிவு இன்று எடுக்கப்படும்

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிக்குழுவினருக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான முக்கிய பேச்சுகள் நேற்றுக் கொழும்பில் நடைபெற்றன.

அரச தரப்பில் நீதியமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத், விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா செயலாளர் நாயகம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர்கலந்து — 8-ம் பக்கம் பார்க்க

## இந்திய - இலங்கைப் பேச்சிற்கு தொண்டமான் அழைப்பு!

இந்தியக் கடவுச்சீட்டு பெற்ற மலையக இந்தியத் தொழிலாளர்களின் எதிர்காலம் குறித்துப் பேச இலங்கை இந்திய அரசுகள் விரைவிற் கூடி முடிவெடுக்க வேண்டும் என அமைச்சர் தொண்டமான் கேட்டுள்ளார் இப்பிரச்சனையை இரு அரசுகளும் மனிதாபிமான ரீதியில் அணுகவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார் இதேவேளையில் இப்பிரச்சனை குறித்துப் பேச்சு நடத்த தாம் தயாராகவுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

## யாழ் மாவட்டத்தில் மீண்டும் தந்திச் சேவை ஆரம்பமாகும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தொலைபேசி சேவைகள் சீரடைந்துவருவதால் விரைவில் தந்திச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது

இது வரை காலமும் தபால் மூலமே தந்திச் சேவை நடைபெற்று வந்தது. இதனால் மக்கள் தந்திச் சேவையைப் பயன்படுத்த வில்லை.

தந்திச் சேவையை நடைமுறைப் படுத்துதற்கான நடவடிக்கைகள் தபாற்பகுதியினரால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (03

## வடமராச்சிப் பகுதியில் எரிபொருள் தட்டுப்பாடு

வடமாரட்சிப் பகுதியில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் ஒரு லீற்றர் டீசல் 16 ரூபா வாக விற்பனை செய்யப்பட்டது இவ்விலை உயர்வினால் பல மினிபஸ்வண்டிகள் சேவையிலீடுபடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (50

## அன்னை பூபதி நினைவாக இன்று நல்லூரில் உண்ணாவிரதம்

இன்று அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டை நினைவு கூரும் அடையாள உண்ணாவிரதம் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் நடைபெறும்.

இந்த உண்ணாவிரதத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்கள்.

கவிதாநிகழ்வுகளும்சிறப்புச் சொற்பொழிவுகளும். நினைவு அஞ்சலி உரைகளும் இடம் பெறவுள்ளன. அனைத்து தமிழ் பேசும் மக்களையும் அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்துமுகமாக கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (03

## கூட்டுறவுச் சங்கங்களில் நேர்மையானோர் தேவை

கூட்டுறவுச் சங்கத்துறையில் திறமையானவர்கள் தேவையில்லை நேர்மையானவர்களே தேவை கூட்டுறவுத் துறையானது தனிப்பட்டவர்களின் சுரண்டலால் தோல்வியைத் தழுவுகிறதுஎன்று கருதப்படு —8ம் பக்கம் பார்க்க

## அதிபர் தரம் உயர்வு நேர்முகப் பரீட்சை தவறியோருக்கு மீண்டும் சந்தர்ப்பம்

அதிபர்தரம் ஒன்று இரண்டு ஆகிய பதவி உயர்வுகளுக்கான நேர்முகப்பரீட்சைக்குத்தோற்றுபவர்கள்எதிர்வரும் 16-ம்17ம் 18-ம் 19-ம் 20-ம் 21-ம் திகதிகளில் தோற்றலாமென இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்கள் யாழ்மாவட்டத்தைசேர்ந்தவர்களுக்கு தாமதமாகவேகிடைத்தது. இதனால் கல்விச்சேவை ஆணைக்குழுவின் அழைப்பை எதிர்பார்க்காமல் தாமாகவே மேற் குறிப்பிட்ட திகதிகளில் பரீட்சைக்கு தோற்றும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால்கிடைக்காதவர்களும், பரீட்சை மேற்பார்வையாளராக கடமையாற்றியவர்களும் இந்தப்பரீட்சையில் தோற்ற முடியவில்லை என இச்சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் கல்விச்சேவை ஆணைக்குழு உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதையடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. (3)

## ஆங்கிலப்பத்திரிகைச் செய்திக்கு டொமினிக் மறுப்பு

நேற்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வந்த தலைப்புச் செய்தி ஒன்றை யாழ் மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர் டொமினிக் மறுத்துள்ளார்.

இந்திய உதவியைப் பெற்று மீண்டும் சுதந்திரப் போராட்டம் நடைபெறும் என டொமினிக் கூறியதாக இந்தக் கொழும்புப் பத்திரிகை நேற்று தலைப்புச்செய்தி வெளியிட் —8ம் பக்கம் பார்க்க

## யாழ்நகரில் 5 நிலையங்களில் விடைத் தாள்கள் திருத்தப்படும்

ஜி. சி. ஈ சாதாரணதரப்பரீட்சை விடைத்தாள் புள்ளியிடும் பணி இம்மாதம் 21 ம் திகதிமுதல் 30ம் திகதிவரை நடைபெறும்.

இப்பணியில் ஈடுபடும் பிரதம பரீட்சகர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கும் கூட்டங்கள் கொழும்பில் இம் மாதம் 17, 18ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. வடபகுதியிலிருந்து பிரதம பரீட்சகர்கள் பலர் கொழும்பு செல்லவுள்ளனர். —8 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக மீனவர் விவகாரம் சட்டசபையில் பிரஸ்தாபம்

(சென்னை)

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து விடுதலைப்புலிகளினால் தடுத்து விசாரணைக்குட்படுத்தப் பட்டு விடுவிக்கப்பட்டது தொடர்பாக நேற்றுத் தமிழக சட்டசபையில் விவாதிக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த இம்மீனவர்கள் பற்றிய விபரங்களை நேரிற் கண்டறிய மீன்வளத்துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன் அப்பகுதிக்குச் சென்றுள்ளதாக கருணாநிதி சட்டசபையில் தெரிவித்தார்.

இதேவேளை புதுக்கோட்டைப் பகுதிக்குச் சென்றுள்ள அமைச்சர் சந்திர சேகரன் இந்தியக் கடல் எல்லைக்குள் மாத்திரமே மீன் பிடிக்குமாறு அம் மீனவர்களைக் கேட்டுக் கொண்டார்.

விடுதலைப்புலிகளால் திருப்பி அனுப்பப்பட்டபுதுக்கோட்டை —8-ம் பக்கம் பார்க்க

## நோன்பு காலப் பரீட்சை முஸ்லிம் மாணவர்கள் பாதிப்பு

இவ்வாண்டு நோன்பு விடுமுறைக் காலத்தில் க.பொ த. சாதாரணதரப்பரீட்சையும் வெளிவாரிப் பட்டப் பரீட்சையும் நடைபெற்றதால் முஸ்லிம் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

நோன்பு முஸ்லிம்களின் கட்டாயக் கடமையாகும். வருடத்தில் ஒரு முறை மாத்திரமே இந்தக் கடமையை நிறை — 8-ம் பக்கம் பார்க்க

## தினவரவு இடாப்புக்கள் யாழ். பாடசாலைகளுக்கு வந்தன

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கெனப் பெருமளவு தினவரவு இடாப்புகள் கடந்த வாரம் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

கடந்த ஜனவரியில் விநியோகிக்கப்படவேண்டிய இந்த இடாப்புகள் காலதாமதமாகவே இங்கு கிடைத்துள்ளன. இம்மாத இறுதிக்குள் இவை பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுவிடுமெனக் கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் ஒருசில இடாப்புகளே பாடசாலை — 8-ம் பக்கம் பார்க்க

# அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி




உண்ணா விரதம் 19. 3. 1988

தியாக மரணம் 19. 4. 1988

தமிழ் ஈழத்திற்காக
தன் இன்னுயிரைத் துச்சமென மதித்து
தியாக மரணமெய்திய
தமிழீழத் தாய்
அன்னை பூபதிக்கு
எமது வீர அஞ்சலி


## "M" Three Travels and Trade Centre

தலைமை அலுவலகம்:
இந்திர பவனம்
சோதி வீதி
காங்கேசன்துறை

கிளை அலுவலகம்:
இல 1, 2வது ஒழுங்கை
மின்சாரநிலைய வீதி
யாழ்ப்பாணம்

04098

# தியாக தீபத்திற்கு எமது அஞ்சலி



அன்னை பூபதியின் தியாகம்
அளப்பரிய பெரும் தியாகமே!
தியாகச் சுடராம் அன்னையே
எமது கண்ணீர் அஞ்சலி

## "சுந்தர்ஸன்"

மத்திய சந்தை,
மானிப்பாய்.

04105

# இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 10-04-1990

நல்வாக்கு

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப்பிழைக்க வழியுண்டாகும் - ஆனல் ஒருவர் செய்த உதவியை மறந்த அழித்தவனுக்கு உய்வு இல்லை.

- ஆங்கிலப் பெரியார்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## எமது சிறுர்களும் தின்பண்ட கிருமிகளும்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் தின்பண்டங்கள் குறித்து பொது மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

இந்த தின்பண்டங்களில் சேர்க்கப்படும் நிறப்பொருட்கள் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்க கூடியனவாக உள்ளன.

சுகாதார அதிகாரிகள் இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பேக்கரி ஒன்றில் இவ்விதம் சுகாதாரத்திற்குக் கேடான தடை செய்யப்பட்ட நிறப் பொருட்கள் சேர்க்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த பேக்கரியில் உள்ள பிஸ்கட்டுகள் யாவும் உடனே புதைக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இனிமேல் இப்படியான செய்கைகளில் ஈடுபடவேண்டாம் என பேக்கரி உரிமையாளருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டார்.

பேக்கரிகளில் செய்யப்படும் தின்பண்டங்களை விட வெளியில் வீதிகளில் வைத்து விற்பதற்கு செய்யப்படும் தின்பண்டங்களே அதிகம்.

அநேகமாக இவற்றை பாடசாலைச் சிறுவர்களே அதிகம் வாங்கி உண்கின்றனர்.

இவர்களைப் பெற்றேர் கட்டுப்படுத்துவது என்பது முடியாத காரியம்.

இத்தகைய விற்பனையாளர்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமே இளம் சிறுர்களைக் காப்பாற்றலாம்.

பெரும்பாலான பாடசாலை வாசல்களில் இத்தகைய சிற்றுண்டி விற்பனையாளர்களைக் காணலாம்,

விற்பனை செய்பவர்களின் உடை, உடல் மிகவும் சுகாதாரமற்ற நிலையில் இருக்கும். அவர்கள் விற்கும் பொருட்களின் தரமோ சொல்ல முடியாதது.

எந்தவொரு தின்பண்டத்தையும் அவர்கள் மூடி வைப்பதில்லை,

எமது வட-கிழக்கு வீதிகளின் புழுதியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

சகல நோய்க்கிருமிகளையும் உள்ளடக்கிய அந்த புழுதிகள் வீதி ஓர திறந்த கடைகளிலே ஒட்டிக் கொள்கின்றன.

இதுவே எமது சிறுர்களின் உடல் நலக் கேட்டிற்கு முதல் எதிரியாகும்.

பாடசாலைகள், சந்தைகள், சந்திகள், திரையரங்கு வாசல்கள் போன்றவற்றிலுள்ள இத்தகைய வியாபாரங்கள் தடை செய்யப்பட வேண்டும்.

மாணவர்களுக்குத் தேவையான சிற்றுண்டிகளை 'கன்ரீன்கள்' மூலம் பாடசாலைகள் வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாண் விநியோகம் செய்யும் வான்கள் பல, புழுதி வீதியால், திறந்த பெட்டியுடன் செல்வதைக் காணமுடிகிறது.

இவை உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இன்றைய வெயில் காலத்தைப் பயன்படுத்தி பலர் பைக்கற் 'ஜூஸ்' தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு சுகாதாரத்திற்கு உதவாத நிறங்களும் 'எசென்ஸ்' வகைகளும் சேர்க்கப்படுவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

எமது சிறுர்களை நாம் நோய்களிலிருந்து காக்க வேண்டுமாயின் இத்தகையோர்மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

---

### பல்துறை விற்பன்னர் கே. எஸ். பாலசந்திரனின் உள்ளக் கிடக்கை வெளிப்பாடு

# தமிழ்க்கலையுலகின் ஆரோக்கிய வளர்ச்சிக்குத் துரிதம் தேவை

கே. பரதன்

1976 ஆம் ஆண்டு சிறந்த இலங்கைத் தமிழ்த் திரைப்படம் என ஜனதிபதி விருது பெற்ற 'வாடைக்காற்று' திரைப்படத்தில் 'விருத்தாசலம்' என்ற பாத்திரத்திற்கு உயிரூட்டிய கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரனை அவரது கொழும்பு இருப்பிடத்தில் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இவ்வருடம் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதியுடன் தனது கலையுலக வாழ்வில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்யும் திரு. பாலச்சந்திரன் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பதுடன் தனது கலையுலக அனுபவங்களை எமது 'முரசொலி' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்ருர்.

கல்வி வளமும் கலைவளமும் ஒருங்கேயமைந்த வடமராட்சி மண்ணில் கரவெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தம்பதியினரின் மூத்த மகனுக திரு. பாலச்சந்திரன் 1944 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் திகதி பிறந்தார். கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்த இவர் தனது இடைநிலை கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் பெற்ருர் 1966 ஆம ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இலிகிதராக இணைந்த இவர் இன்று சிரேஷ்ட வரிஉத்தியோகத்தர் ஆகப்பதவி வகிக்கிருர். 1975 இல் இல்லற ஓடையில் இணைந்த இவர் இன்று சுபாசினி (14), வசீகரன் (12) என்ற இரண்டு பிள்ளைகளுக்கு தந்தை.

வெள்ளி விழாக் கலைஞரின் முதலாவது கலையுலகப் பிரவேசம் 1965 இல் ஏப்ரல் 2 ஆம் திகதி நெலலைக. பேரனின் 'புரூக்கர் பொன்னம்பலம்' என்ற மேடை நாடகத்தில் கதாநாயகனுக நடித்ததுடன் ஆரம்பமானது. தொழிலின் நிமிர்த்தம் அடுத்து கொழும்பு வந்து; 1968 இல் லும்பினி கலையரங்கில் மறை முதல்வன் எழுதிய 'முசுப்பாத்திதான்' என்ற நாடகத்தில் கதாநாயகனுக நடித்தார்.

'வெற்றி வாய்ப்புகள் மலர்ப் படுக்கையில் இருந்து பெறப்படுவன அல்ல' என்ற ஆங்கிலப் பழமொழியினைப் போன்றே இவரின் கலையுலக ஆரம்பமும் கரடுமுரடானதாக காணப்பட்டது கலையுலகில் தனக்கு வேண்டிய அறிவுரைகளை வழங்கி தனது கலையுலக வாழ்வினைச் செம்மைப் படுத்திய 'குரு' என்று வரணியூரான் எஸ். எஸ். கணேசபிள்ளையினை குறிப்பிடுகின்ருர். மேலும் கலையுலக நண்பர்களான ஜே பி. ரூபேட், எஸ். ராமதாஸ், ரி. ராஜகோபால், சி. சண்முகம், கே கே. மதிவதனன், ஏ ரகுநாதன் போன்ருேரின் உதவிகளினுலும் ஒத்தாசைகளினுலும் தனது கலையுலகப் பயணம் தொடரப்பட்டது என நன்றிப் பெருக்குடன் இவர்களை நினைவு கூருகின்ருர்.

இவர் நடித்த மேடை நாடகங்களில் புகழைத்தேடித் தந்தவை என்று குறிப்பிடக்கூடிய நாடகங்கள், 'புளுகர் பொன்னையா', 'கோவூரின நம்பிக்கைகள்', 'பாசச்சுமை', 'தேரோட்டி மகன்', 'ரகுபதி ராகவ ராஜாராம்', 'ஞான ஒளி' என்பன. 1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டில், யாழ். மண் வாசனையை பிரதிபலிக்கும் இவரின் கலையம்சங்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேடை நாடகக் கலைஞராக மலர்ந்த இவர் 1973 இல் தனது முதலாவது தனி நடிப்பு நிகழ்ச்சியினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன 6 ஆம் இலக்க கலையகத்தில் வானெலி ரசிகர்கள் முன்னிலையில் நடத்திஞர். இவர் நடித்த முதலாவது வானெலி நாடகம் எம்.எஸ்.எம். ஜிப்றி எழுதிய ''அஞ்சாமல் தனி வழியே'' என்ற நாடகம். சுமார் 300 நாடகங்களை இன்று நடித்து முடித்துள்ள இவர் பல தொடர் வானெலி நாடகங்களையும் நடித்துள்ளார். அவற்றுள் இளங்கீரன் எழுதிய ''வாழப்பிறந்தவர்கள்'', ''மனித புராணம்'' என்பனவும் வீ. என். பாலசுப்பிரமணியம் எழுதிய ''பழமுதிர்ச்சோலை'' என்பன குறிப்பிடத்தகுந்தன. இவற்றுடன் மக்கள் மத்தியில் பெரும் உணர்ச்சிப் பெருக்கத்தை உண்டுபண்ணிய சில்லையூர் செல்வராஜன் எழுதிய ''தணியாத தாகம்'' என்ற நாடகமும் குறிப்பிடத்தகுந்தது. 'தணியாத தாகம்' என்றவுடன் எம் மனக்கண் முன் தோன்றும் காட்சி- யோகத்தின் மரண ஊர்வலக்காட்சி. அன்று பல வானெலி ரசிகர்கள் வானெலிப் பெட்டியின் முன் கண்ணீர் தோய்ந்த முகத்துடன் காணப்படுமளவுக்கு அந்நாடகம் மக்களின் மனதை வருடிச் சென்றது. அந்நாடகத்தில் திரு. பாலச்சந்திரன் 'சேமு' என்ற பாத்திரம் ஏற்றிருந்தார்.

நாடக நடிகராக மட்டும் நின்றுவிடாது நாடக எழுத்தாளனுகவும் இவர் விளங்குகிருர். ஆரம்பத்தில் 'மத்தாப்பு' என்ற வானெலி நிகழ்ச்சிக்கு குட்டி நாடகங்களை எழுதிஞர். இவர் 1971 இல் தனது முதல் நாடகப்படைப்பாக 'பெண்களே இப்படித்தான்' என்ற நாடகத்தை எழுதிஞர் இவரின் அண்மைக்காலப்படைப்புகளில் 'கிராமத்துக் கனவுகள்' என்ற யாழ். மண்வாசனை கமழும் தொடர் நாடகம் மக்கள் மனதில் பெரும் அபிமானத்தைப் பெற்றிருந்தது. இலங்கையில் முதன்முதலில் ஒலிப்பதிவு நாடாவில் விற்பனைக்கு வெளிவந்த தொடர் நாடகம் என்ற பெருமையும் இந்த நாடகத்தையே சேரும். இந் நாடக கதைவசனம் விரைவில் நூலுருவில் வெளிவரவுள்ளது.

நாடக நடிப்புத் துறை, நாடக எழுத்துத் துறை என தனது திறனை இவர் மட்டுப்படுத்திக் கொள்ளாமல், வானெலியில் பல்வேறு அம்சங்களை வழங்கிவருகிருர். 1972 இலும், 1984 இலும் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள்' என்ற உரைச்சித்திரத்தை எழுதி வழங்கிஞர். 'கலைப் பூங்கா' என்ற வானெலிச் சஞ்சிகை நிகழ்ச்சி மூலம் பல மேலைத்தேச கலைஇலக்கிய கர்த்தாக்களை நமது மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்

திரு. பாலச்சந்திரனின் மாருத இளமைத் தோற்றம் அவரை இலங்கைத் தமிழ்த் திரையுலகிற் பங்கேற்க வைத்தது. இந்தவகையில் முதன் முதலில் சிங்கள மொழியில் இருந்து தமிழுக்கு 'டப்' செய்யப்பட்ட 'கலியுக காலம்' என்ற திரைப்படத்திற்கு குரல் கொடுத்துள்ளார் பின் 1976ல் ஜனதிபதி விருது பெற்ற 'வாடைக்காற்று' என்ற திரைப்படத்தில் 'விருத்தாசலம்' என்ற பாத்திரம் ஏற்று நடித்துள்ளார், மேலும் மலையக மக்களின் வாழ்க்கை விழுமியங்களை பிரதிபலிக்கும் 'அவள் ஒரு ஜீவநதி' என்ற திரைப்படத்தில் மலையகத்தமிழ பேசி நடித்துள்ளார் 'நாடு போற்ற வாழ்க' என்ற திரைப்படத்தில் சிங்கள நடிகைகளான கீதா குமாரசிங்க சுவர்ண மல்லவராச்சி போன்ருேருடன் இணைந்து நடித்துள்ளார்.

இவ்வாறு பல்வேறுதுறைகளிலும் தனது முத்திரையை பதித்த திரு. பாலச்சந்திரன் தொலைக்காட்சியிலும் சிறுவர் நிகழ்ச்சி, நாடகங்கள் என பல ரகப்பட்ட நிகழ்ச்சிகளை வழங்கி வருகிருர். அண்மையில் ஒரு சிங்களநடிகை ஆங்கில நாளிதழ் ஒன்றுக்களித்த செவ்வியில் கூறிய கூற்று இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.

''இலங்கை ஒரு சிறிய நாடாக இருப்பதால் ஒரு கலைஞன் தனது கலைத்திறனை ஒரு துறையினில் மட்டும் என்று வரையறுக்காது, பல்வேறு துறைகளிலும் ஈடுபடுத்துவதன் மூலமே ஒரு ஆரோக்கியமான, வளமான கலையுலக வாழ்வை அனுபவிக்க முடியும்''

இந்த வகையில் திரு. பாலச்சந்திரன் முன்னேடியாக திகழ்கின்ருர். இன்று அவர் பத்திரிகையில் விளையாட்டு செய்திகள் விமர்சனங்கள் என பல அம்சங்களை எழுதத்தொடங்கியுள்ளார்.

பல்துறை விற்பன்னரான இவர் கடல் கடந்து சென்றும் தமிழ் ரசிகர்களின் தாகம் தீர்த்து வருகிருர். சென்ற வருடம் நவம்பர் மாதம் பிரான்சிலுள்ள இலங்கைக் கலையகம்' விடுத்த அழைப்பை ஏற்று ஒரு மாதகால சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் கலைநிகழ்ச்சிகளை நடத்தி விட்டு நாடு திரும்பியுள்ளார். இந்த வெளியுலகப் பயணத்திற்கு திரு எஸ். கே. ராஜனும், பிரபல அறிவிப்பாளர் திரு. பீ எச். அப்துல் ஹமீத்தும் வழிசமைத்துக் கொடுத்திருந்தார்கள்.

இவ்வாறு பல்துறை விற்பன்னர் என்று கூறப்படுமளவிற்கு திரு. பாலச்சந்திரன் சகல துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளார். தமிழ் கலையுலகின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குப் பல சிறந்த கருத்துக்களைக் கூறுகின்ற இந்தக் கலைஞரின் சிந்தனையுருவங்களை நனவாக்க தமிழ் கூறும் நல்லுலகத்தின் ஆதரவு இன்றியமையாதது. நம் நாட்டின் நிச்சயமற்ற அரசியல் சூழ்நிலையினுல் நமது கலைத்துறையைத் திட்டமிட்டு முன்னெடுத்துச் செல்லமுடியவில்லை என ஆதங்கப்படுகின்ருர். மேலும் இன்று தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் பொருள் முதல்வாதம் தலையெடுத்துள்ளமையால் கலை இரண்டாம் பட்ச அம்சமாகியுள்ளது அத்துடன் சிறுபான்மையினத்தவரின் கலாசார வளர்ச்சிக்கு அரசின் ஆதரவும் ஆரோக்கிய

—4ஆம் பக்கம் பார்க்க

தனது கலையுலக வாழ்வின் வெள்ளிவிழா வருடத்தில் புகழ்பூத்த பூரிப்புடன் திகழ்கிருர் பல்துறை விற்பன்னர் கே. எஸ. பாலச்சந்திரன. அவரது கலையுலக அனுபவங்கள் பற்றி அவர் தரும் சுவையான தகவல்கள் இங்கு தரப்படுகின்றது.

# வன்னிச் செய்திகள்

## 3 ஆயிரம் ஆங்கில ஆசிரியர்

பாடசாலைகளில் ஆங்கிலம் போதிப்பதற்குக் கல்வி, உயர் கல்வி அமைச்சு ஒப்புதல்பெற்ற மூவாயிரம் ஆசிரியர்களை விரைவில் நியமிக்கவிருக்கின்றது இளைஞர்கள் மத்தியில்விரக்தியற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி கமிஷன் இவ் வருடத்திலிருந்து 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகப் போதிக்குமாறு செய்திருந்த சிபாரிசை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்தேஇத் தீர்மானம்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வவுனியாவில் இணக்கசபை

வவுனியா மாவட்டத்தில் பதினொரு இணக்கசபைகள் தெரிவு செய்யப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளன. இச் சபைக்கான தலைவர், செயலாளர் உறுப்பினர்கள் என்போர் அவ்வூர்க் கிராம மக்களாலே தெரிவுசெய்யப்பட்டனர். இணக்க சபைகளுக்கான வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் திரு. மாரி முத்து பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இணக்க சபைக்கான சட்டக்கோவைகள் பற்றிய கலந்துரையாடலும் ஆய்வும் இடம்பெற்றது.

## துணுக்காயில் நாடகப் போட்டி

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவால் துணுக்காய் பாண்டியன்குளப் பிரதேசத்தில் கடந்த 24-ம், 25-ம் திகதிகளில் யோகபுரம் மகா வித்தியாலயத்தில் நாடக போட்டிகள் நடைபெற்றன.

24-ம் திகதி பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சந்திரன் அவர்களும், மல்லாவி கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. சிவராசா அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்கள். 25-ம் திகதி நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் போசனும் முல்லை மாவட்டக்கல்வி நிர்வாக உத்தியோகத்தர் மெற்றுஸ் மெயிலும், முல்லை மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் சங்கரும், துணுக்காய் பாண்டியன்குள பிரதேசப் பொறுப்பாளர் ஜொனியும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்கள். அன்றைய தினம் போட்டிகள் நடைபெற்றன. அதில் கௌரவ போட்டிகளாக 'பண்டார வன்னியன்' நாடகமும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் 'நல்லதைச் சொல்வோம்' என்ற வில்லிசையும் இடம் பெற்றன. (11)

## வங்கி திறக்கப்படும்

எதிர்வரும் 14-ம் திகதி தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தன்று வவுனியா இலங்கைவங்கிக் கிளை திறந்திருக்கும் என மேற்படிகிளை வங்கி முகாமையாளர் திரு. வி ஜெகதீசன் தெரிவித்தார். புத்தாண்டு தினத்தன்று புதுக்கணக்கு ஆரம்பிக்க விரும்புவோர், கைவிஷேசம் கொடுக்கல், வாங்கலுக்காக காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை இரண்டு மணித்தியாலம் திறந்திருக்கும் என முகாமையாளர் கூறினார் அன்றைய தினம் வவுனியா கிளைக்குவரும் வங்கி வாடிக்கையாளர்களை வரவேற்கவும், உபசரிக்கவும் விசேட ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் வங்கி சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சொன்னார். (11)

## மாபெரும் சமாதான யாத்திரை

வவுனியாவில் மே மாதம் மாபெரும் சமாதான சமய பாதயாத்திரை பதினொரு தினங்களுக்கு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மே 4-ம் திகதி ஆரம்பமாகி மே14-ம் திகதி இந்த யாத்திரை முடிவுபெறும் வவுனியா மாவட்டத்தில் உள்ள சகல இந்து ஆலயங்களுக்கும் இந்த பாதயாத்திரைக் குழு விஜயம் செய்யும் அத்துடன் பஜனைக் குழுவும் இவர்களுடன் செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது எமது மக்களிடையே சமய எழுச்சியினை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இந்த பாதயாத்திரை வவுனியாவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருப்பதாக ஆத்மஜோதி திரு. நா. முத்தையா இது தொடர்பான வைபவம் ஒன்றில் பேசுகையில் வவுனியாவில் குறிப்பிட்டார் வ. தெ. த. பி உதவி அரச அதிபர் திருமதி எமில்டா அற்புதராஜா கருத்து தெரிவிக்கையில் இந்த சமய யாதயாத்திரைக்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். வவுனியா பகுதியில் உள்ள சகல கிராம சேவையாளர்களும் இந்த யாத்திரை தொடர்பான ஏற்பாடுகளை கவனிப்பார்கள் அத்துடன் ஆலய பரிபலான சபையினரும், கிராமிய சமய பிரமுகர்களும் ஒத்துழைப்பு நல்க முன் வந்துள்ளனர் என ஏற்பாட்டார்கள் தெரிவித்தனர்

## தீக்குளிப்பு இடம் பெற்றது

இறம்பைக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த விழாவில் பெரும் தொகையான பக்த அடியார்கள் தீக்குளிப்பில் பங்குகொண்டனர் பெண்களும் தீக்குளிப்பில் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது. (11)

## வைத்திய அதிகாரி இடமாற்றம்

வவுனியா அரசினர் வைத்தியசாலையில் கடந்த பதினொரு வருடங்களாக மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய வைத்திய கலசநிதி சிறீராஜேஸ்வரன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக டாக்டர் செந்தில்காந்தன் பொறுப்பேற்கவுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் கூறின. (11)

### மந்திரி லலித் எச்சரிக்கை; பிள்ளைகளை

# பாடசாலைக்கு அனுப்பாவிடில் தண்டனை விதிக்கச் சட்டம்

'பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுவர்' என்று கல்வி உயர் கல்வி அமைச்சர் திரு. அத்துலத்முதலி தீர்மானித்துள்ளார்

இதனைக் கண்டிப்பாக மேற்கொள்வதெனக் கூறிய அவர் 'இதற்காகப் புதிய சட்டம் வகுத்து வர்த்தமானி மூலம் வெளியிடப்படும்' என்றார்

இலங்கை மக்களின் எழுத்தறிவு பற்றி அண்மையில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன்படி இலங்கையில் எழுத்தறிவுள்ளவர்களின் எண்ணிக்கை 85 சத வீதத்திலிருந்து 75 சத வீதமாகக் குறைந்திருப்பது கண்டு பிடிக்கப்பபட்டது. இந்த நிலைமை நாட்டின் அபிவிருத்தியைப் பெரிதும் பாதிக்கக்கூடும் என்பதால் 1-ம் ஆண்டு முதல் 8-ம்ஆண்டு வரை சகல பிள்ளைகளும் கட்டாயம் பாடசாலைக்கு அனுப்பப்படவேண்டும் என்று கூறிய அவர் இத்திட்டத்தின் கீழ் பாடசாலை செல்லும் வயதில் உள்ள சிறுவர்கள் கருவாட்டு வாடிகள் போன்ற இடங்களில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனரா என்பதையும் கண்டு பிடிக்க முடியும் என்றும் கூறினர்.

## 40வது ஆண்டுநிறைவு போட்டி

அரியாலை காந்திசனசமூகநிலையம் அதன் 40வது ஆண்டுநிறைவு விழாவினையொட்டி இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர்ப் போட்டிகளையும் இரவுக் கலை நிகழ்ச்சிகளையும் இம் மாதம் 14,15,16,17ந் திகதிகளில் நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக இல்லங்களுக்கிடையிலான எறிபந்தாட்டம் தாச்சி முதலானபோட்டிகளை நடாத்தி முடித்துள்ளது.

நாட்டின் அண்மைக்காலச் சூழ்நிலைகள்காரணமாகஇதற்கு முன்னைய ஆண்டுவிழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாகக் கொண்டாட முடியாமற் போயினவாயினும் இம்முறை இவ்விழாவினை வெகு விமரிசையாகக் கொண்டாட இன் நிலையத்தின் ஆட்சிக்குழு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது

## பாடசாலைக்கு நிதி ஒதுக்கப்பட்டது

இயக்கச்சி அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் கட்டிடப் பற்றாக் குறையை நீக்குமுகமாகவும் இவ் வித்தியாலத்தின் அபிவிருத்திக்குமென பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து இரண்டு லட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது அத்துடன் பச்சிலைப்பள்ளி உதவி அதிபர் பிரிவினாலும் விஞ்ஞான கூடத்திற்கென நிதி ஒதுக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி இரவில் இருளில்

கிளிநோச்சி பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள பிரதான வீதியில் நீண்டகாலமாக தெருவிளக்குகள் இல்லாமல் இருளில் மண்டிக்கிடக்கிறது.

இந்தப்பகுதியின் ஒரு புறத்தில் பொலிஸ் நிலையமும் மறுபுறத்தில்,பிரதேச சபையும் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மைதானமும் உள்ளது இவ் விடத்தால் இரவில் போகும் போது மக்கள் மிகுந்த அச்சத்துடனே செல்கின்றார்கள். (35)

## தமிழ்க கலையுலகில்...

மானதாகவில்லை. இவ்வாறான இடர் சூழ்ந்த நிலையில் நமது கலை கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பது ஓர் இலகுவான முயற்சியாக அமையாது என்றும் ஆதங்கப் படுகின்றார். எனவே நம்முடைய கலை, கலாசார பாரம் பரியங்களை நம்மவர்தான் முன் வந்து பாதுகாக்கவேண்டும். இந்த வகையில் தமிழ்பேசும் மக்களின் சிந்தனையோட்டங்களில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று கூறுகிறார்.

## ஆற்றலாளர் அறிமுகம்

ஆற்றலாளர் அறிமுக வரிசையில் அண்மையில் வெளியான க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி (A) பெற்ற மாணவர்கள் முதலில் அறிமுகம் செய்யப்படுகிறார்கள்.



சென்ஜோன்ஸ் கல்லூரியைச்சேர்ந்த துஷ்யந்தன்-திசநாயகம் 18 வயது நிரம்பிய இளைஞன் யாழ்ப்பாணக் கச்சேரிநல்லூர் வீதியைச்சேர்ந்த இவரைச் சந்தித்தபோது...... உற்சாகத்துடன் காணப்பட்டார். சந்தோஷமும் சாதித்த திருப்தியும் இவர் முகத்தில் காணப்பட்டது முரசொலிக்காக இவர்தனது கருத்துக்களை இப்படித் தெரிவித்தார்:

சின்னவயதிலிருந்தே சிறந்த பொறியியலாளராக வர வேண்டும் என்பது என் இலட்சியம் அந்தத் துறைக்கு நான் சித்தியடைந்ததில் மிக்க மகிழ்ச்சி எனக்கு என் தந்தையும் ஒரு பொறியியலாளராக இருப்பதால் நானும் இத்துறைக்கு வருவதற்கு அது பெரும்உந்துதலாக இருந்தது.

நான்பரீட்சையில் சித்திடைவேன் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. எனது அயாராத முயற்சியும் தன்நம்பிக்கையும் தான் என் வெற்றிக்கு முதல் காரணம். என் வெற்றிக்கு காரணம் நானே என் பெற்றோர், நண்பர்கள் ஆசிரியர்கள் உதவியும் எனக்கு பெரும் பக்க பலமாக இருந்தன என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். இவை எனக்கு உளரீதியான உற்சாகத்தை அதிகளவு தந்தன.

என் எதிர்கால இலட்சியம் சிறந்த சிவில் எஞ்ஜினியராக வரவேண்டும் என்பது தான் உயர்கல்விகற்பதற்காக வெளி நாடுகள் செல்லும் வாய்ப்புக்கள் ஏற்பட்டாலும் என் கல்வியை முடித்துவிட்டு என் நாட்டிற்கே திரும்பி மீண்டும் வந்துதுவிடுவேன், என் கல்வி, சேவை அனைத்தையும் என் நாட்டிற்கே அளிக்க விரும்புகின்றேன் (இந்த இடத்தில் அவர் முகத்தில் உறுதி பிரதிபலித்தது.)

நாளைக்கு என்று ஓர் நாள் இருக்கின்றுதுஎன்ற நம்பிக்கை இல்லாமல் கடந்த கால அரசியல் நிலைப்பாடுகள் எனக்கு மன சோர்வினையும் விரக்தியையும் அளித்தாலும் நம்பிக்கையுடன் உறுதியுடன் படித்தேன். வீட்டைவிட்டுவெளியேபோக முடியாத நிலையில் எங்கும் செல்லாமல் வீட்டிலிருந்தே படித்தேன். ஒரு வேளை கொழும்பு என்று சென்றிருந்தால் என் கல்வி பாதிப்படைந்திருக்கும் எப்பிரச்சனை தடங்கல்கள் ஏற்பட்டாலும் என்னால் படித்து முன்னுக்கு வர முடியும் என்ற அயராத நம்பிக்கை என்னிடம் இருந்தது.

நல்ல முறையில் எனக்கு கல்வியைப் போதித்த என் பாடசாலையை என்னால் மறக்க முடியாது அதேசமயம்-பல இடங்கள் என்று அலையாது நம்பிக்கையுடன் ஒரே இடத்திற்கே டியூசனுக்குப் போனதும் எனக்கு பலனைத்தந்தது. கட்டுரை சிறுகதை நாடகம் என்பவற்றில் (இருமொழிகளிலும்) மாவட்ட ரீதியில் பரிசில்களைப் பெற்றுள்ளேன்.

இறுதியாக படிப்பவர்கள் எல்லோரும் டாக்டர்களாகவும் எஞ்ஜினியர்களாகவும் வரமுடியாது. இறைவன் எல்லோர்க்கும் ஒவவொரு திறமைகளைச் கொடுத்துள்ளான். அவற்றை சரியான முறையில் பயன்படுத்தினால் எதிர்காலத்தில் நன்றாகப் பிரகாசிக்கலாம் என்பது என் கருத்து.

எமது அரசியல் பாதிப்புகளாலும், நாட்டு நடைமுறைகளாலும் எமது கல்வி முறையில் எதிர்பார்க்கும் முன்னேற்றங்கள் இல்லை செய்முறைகளுக்கான பாடமுறைமளை அதிகளவு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

க. பொ. த. சாதாரண பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதி திறமைச்சித்தி சித்திபெற்று, உயர்தரத்திலும் நான்கு பாடங்களில் அதி திறமைச்சித்தி பெற்ற இந்த சிறு வயது சாதனையாளன் எதிர்காலத்தில் சிறப்புற 'முரசொலி' வாழ்த்துகின்றது.

## கிளிநொச்சி மக்கள் வங்கி புதுவருடக்கைவிசேடம

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில நீண்ட இடைவெளியின்பின் புதுவருட கைவிசேடம் சம்பிரதாய முறைப்படி எதிர்வரும் 14 ம் திகதி சனிக்கிழமை வங்கிக்கிளையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப் படும்.

வன்செயல் காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதுவருட கைவிசேட நிகழ்ச்சி இலங்கை வங்கி கிளிநொச்சிக் கிளைமுகாமையாளரான திரு எஸ் லோகநாதனால் ஆரம்பித்து வைக்கப்படும் வாடிக்கையாளர்களுக்கு கைவிசேடமாக புதிய ஒரு ரூபா நாணயங்கள் வழங்கப்படவுள்ளன. கடன் புதிய வைப்புக் கணக்குகளும் ஆரம்பிக்கப்படும் (34)

## முல்லை மாவட்டத்தில்
# கல்வி முன்னேற்றத்தை உரியளவு அடைய முடியாதிருப்பது ஏன்?

### பணிப்பாளர் விளக்கம்

''முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர்களின் வளம் கிட்டத்தட்ட 40 வீதமே உள்ளது இதனுல்தான் கல்வி முன்னேற்றத்தை உரிய அளவு அடையமுடியாமல் இருக்கிறது. ஆசிரியர்கள் எவ்வித முன் அறிவித்தலுமின்றியும், பதில் ஆசிரியர்கள் இன்றியும் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்படுகின்றனர். இக்குறைபாடுகளை நீக்கி உரிய இலக்கை அடைய உங்களின் பணி இம் மாவட்டத்திற்கு மிக அவசியமாகும்''

மேற்கண்டவாறு பயிற்சி ஆசிரியர்களின் நியமன வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். எஸ். மனோகரன் சொன்னார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''இம்மாவட்ட ஆசிரியர் குறைபாட்டை மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டியதன் பயனாக எமது ஆசிரியர் வளத்தை 80 வீதத்திற்கு உயர்த்தும் அளவிற்கு எமக்குப் பயிற்சி ஆசிரியர்களைக் கல்விச்சேவை ஆணைக்குழு நியமிக்கும்படி பணித்துள்ளது.

இந்தப் பயிற்சி ஆசிரியர்கள் நியமனங்களில் கொடுக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரங்கள் போலி எனத் தகவல் கிடைத்துள்ளது. இவை அவ்விதம் உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களின் நியமனங்கள் ரத்துச் செய்யப்படும். இவ்வாசிரியர்களுக்குக் கற்பித்தல் தொடர்பான பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.'' என்றார்.

## வடகிழக்கு கடற்றொழில்பற்றி அமைச்சருக்கு மகஜர்

வட கிழக்கு கடற்றொழில் உத்தியோகத்தர் அமைப்பின் தலைவர் சிறிஸ்கந்தராசா கடற்றொழில் அமைச்சுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார் 1983 இற்கு பின் வட கிழக்கு மீனவருக்கு ஏற்பட்ட பாதிப்பு பற்றியும்எதிர்கால மீன்பிடித் திட்ட அபிவிருத்தி பற்றியும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வாகனங்கள் உரசிக் கொண்டன ஸ்ரான்லிவீதி நேற்று ஸ்தம்பிதம்

யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் நேற்று நண்பகல் சுமார் ஒரு மணித்தியாலதிற்கு மேலாக வாகன நெரிசல் ஏற்பட்டதால் வாகனங்கள் நகர முடியாமல் அப்படி அப்படியே நின்றன. மக்களும் எங்கும் நகர முடியாதபடி ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக நின்றனர்.

இந்த நேரத்தில் ஸ்ரான்லி வீதியில் பல விபத்துக்களும் ஏற்பட்டன யோராளி ஒருவர் சைக்கிளில் போன போது மினிபஸ் ஒன்றுல் லொறியொன்றோடு சேர்த்து நெரிக்கப்பட்டார். பல சைக்கிள் காரர்கள் விழுந்தெழும்பினர். ஒன்றோடு ஒன்று உரசிக் கொண்டதனால் பல வாகனங்களில் சிராய்ப்புக்கள் ஏற்பட்டன.

## இலங்கை வங்கி விசேட புத்தாண்டுசேவை

இலங்கை வங்கி விசேட புத்தாண்டுச் சேவை ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது

கொழும்பு, நுவரெலியா, குருநாகல் காலி, மாத்தளை இரத்தினபுரி ஆகிய கிளைகளுடன் யாழ்ப்பாணத்தில் மத்திய பஸ் நிலையக் கிளையிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்விசேட புத்தாண்டுச் சேவை நடைபெற்றது.

# தமிழ் இலக்கியம் வளர என்றும் உதவுவேன்

(நேற்றைய தொடர்ச்சி)

நேற்று முரசொலியில் பிரசுரிக்கப்பட்ட 'நான் ஒரு அமைச்சராக வரவில்லை, தமிழன் என்றரீதியில் வருகிறேன்' அமைச்சர் தேவராஜ் பேட்டியில் மிகுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

பஞ்சாங்கத்தைத் தெரிவு செய்வதில் பிரச்சினைகள் ஏற்படாதா என்று கேட்டதற்கு எம்மிடம் சிறந்த ஆலோசனைக் குழு இருக்கிறது. அத்தோடு நாட்டில் உள்ள முக்யமான சோதிடர்களுடனும் விவாதம் நடத்தப்படும். பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்ளும் பஞ்சாங்கத்தையே தெரிவு செய்வோம். இப்படியான விஷயங்களில் ஈடுபடும்போது ஆரம்பத்தில் எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்யும் எதிர்ப்பு இல்லாமல் எக்காரியத்தையும் செய்ய முடியாது.

தலைநகரில் திருக்கணித பஞ்சாங்கத்திற்கே மதிப்பு என்று அமைச்சர் குறிப்பிட்டபோது நான், வடபகுதியில வாக்கிய பஞ்சாங்கத்தையே பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

100 வருடம் பழமை வாய்ந்த பஞ்சாங்கம் அது. இப்பஞ்சாங்கம் சொல்வதே உறுதி என்று வாதிடுபவர்கள் பலர் இருக்கின்றார்கள். எது எப்படி இருப்பினும் ஏதோ ஒரு பஞ்சாங்கத்தை உத்தியோகபூர்வமாக ஏற்க வேண்டும். உதாரணமாக வருடம் பிறக்கும் நேரத்தை இரண்டு பஞ்சாங்கங்களும் வெவ்வேறு விதமாகக் கூறுகின்றன. இதனுல் குழப்பதிற்கு மேல் குழப்பமே ஏற்படுகின்றது என்றும் குறிப்பிட்டபோது...

எதிர்வரும் 12 ஆந் திகதி 'ரக்ஷணய மந்திரய' கட்டடத்தில் சோதிடர்கள் கூடிஇது பற்றி ஆராய இருக்கின்றார்கள் விரைவில் உத்தியோகபூர்வமாக எந்தப் பஞ்சாங்கத்தை ஏற்றுக்கொள்வது என்று அறிவிக்கப்படும் என்று அமைச்சர் பதில் தந்தார்

### இலக்கியம் வளர உதவி

தமிழ் இலக்கியம் வளர, தமிழ் நூல வெளியீடுகளை ஊக்குவிக்க உங்கள் அமைச்சு ரீதியான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளீர்களா? என்று அமைச்சரிடம் கேட்டபோது அவர் சொன்னார். தற்போது ஒரு நூல் வெளியீடு இடம்பெற்றால் 50 பிரதிகளை நாம் பெற்றுக் கொள்கிறோம். எழுத்தாளர்களை ஊக்குவிக்க அவர்களது நூல்களைப் பெற்று விற்பனையை மேற்கொள்ள நூல்களை சேகரிக்கும் தனி அமைப்பு ஒன்றை ஏற்படுத்த திட்டமிட்டிருக்கிறோம்.

இதுபற்றி பாராளுமன்றத்திலும் அறிக்கை சமர்ப்பிக்கவிருக்கின்றோம். நூல் சம்பந்தமான தனி அமைப்பில் தனியார் முதல் பாடசாலைகள், சங்கங்கள் உட்பட அங்கத்துவம் வகிக்கலாம். இந்த அமைப்பு கொள்வனவு செய்யும் நூல்கள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கிய விபரக்கோவை அங்கத்துவம் பெறுபவர்கள், மற்றும் ஸ்தாபனங்களிடையே விநியோகிக்கப்படும் அவர்கள் தெரிவு செய்யும் புத்தகங்கள், நிர்ணயிக்கப்பட்ட விலையில் கொடுக்கப்படும்.

இப்படி செய்வதன் மூலம் இலங்கை பூராவும் உள்ள தமிழ் வாசகர்கள் எல்லோருடைய நூல்களைப்பற்றி அறிந்து தமக்குத் தேவையான நூல்களைக் கொள்வனவு செய்ய முடியும். இதன் மூலம் எழுத்தாளர்களையும் தமிழ் இலக்கியத்துறையையும் வளர்க்க முடியும் என்று நினைக்கிறேன் என அமைச்சர் உற்சாகமாக பதில் தந்தார்.

எழுத்துலகில் பிரகாசித்து இன்று நலிந்தநிலையில் வாழும் எழுத்தாளர்களுக்கு உங்கள் அமைச்சு உதவி செய்துள்ளதா என்று அமைச்சரிடம் கேட்டபோது, முதுபெரும் எழுத்தாளர்களை அழைத்து நாம கௌரவித்ததோடு பணப் பரிசில்களையும் வழங்கியுள்ளோம். தமிழ் வளரவும், இலக்கியம் வளரவும் எமது அமைச்சு என்றும் பின் நிற்காது என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

நான் அமைச்சரின் பொன்னான நேரத்தை வீணுக்க விரும்பாமலும், அமைச்சருக்கும் அவரைப்பார்க்க வரவேற்பறையில் காத்திருக்கும் மக்களுக்கு இடையூறு செய்யாமலும் இருக்க பேட்டியை சுருக்கமாக முடித்து அமைச்சரின் யாழ். விஜயம் வெற்றிபெற வாழ்த்தி விடை பெற்றேன்.

# செய்தி மஞ்சரி

## வட்டியில்லாக் கடன்

அரசாங்கத்தினுல் உரத்துக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்கள் நீக்கப்பட்டதையடுத்து உரத்தின் விலை இருமடங்காக அதிகரிக்கப்பட்டதனுல் பாதிப்புற்ற விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கு முகமாக வட்டியில்லாக்கடன்களை வழங்க மக்கள் வங்கியின் தலைமைக்காரியாலயம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய வட்டியில்லாமலும், பிணையாள் இல்லாமலும் 5 ஏக்கர் நெற்காணியைக் கொண்ட விவசாயி ஒவ்வொருவருக்கும் கடன் வழங்குமாறு மக்கள்வங்கி மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளருக்கு மக்கள்வங்கியின் தலைமை அலுவலகம் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது

இதற்கென 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் காலபோகச் செய்கை நடைபெற்று வரும் இக்காலகட்டத்தில் கடன்களை வழங்குமாறு சுற்றறிக்கையில் பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## 3500 பேருக்கு அனுமதி

இவ்வருடம் புனித ஹஜ்ஜின் கடமைக்காக இலங்கையிலிருந்து 3500 பேருக்கு அனுமதி வழங்கப்படும் என்று முஸ்லிம் சமய விவகார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் அவர்கள் தெரிவித்தார்.

இது கடந்த வருடத்தைவிட 500 பேர் கூடுதலானதாகும். இம்முறை ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்புவோர் முஸ்லிம் விவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

## நியமனம் இடைநிறுத்தம்

வடக்குக்- கிழக்கு மாகாணசபைக்குள்ளடங்கும் மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேசசபைகளிற் புதிய நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் வழங்கப்படுவது, மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தஞ் செய்யப்பட்டுள்ளதாக, வடக்குக் கிழக்கு மாகாணசபை உள்ளூராட்சிச் சேவைத்திணைக்களப்பணிப்பாளர் பி. ஜெகநாதன் அறிவித்துள்ளார்.

## நேரம் கூட்டக் கோரிக்கை

அம்பாறை மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கிளைகள் தமது கருமமாற்றும் நேரத்தை அதிகரிக்க வேண்டும் என்றும், பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் இப்பகுதிவங்கி வாடிக்கையாளர்கள் பிராந்திய வங்கி முகாமையாளருக்கும், கொழும்புத் தலைமை அலுவலக வங்கி உயரதிகாரிகளுக்கும், மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்,

## ரயில் நேரம் மாற்றம்

மட்டக்களப்பு திருகோணமலை, தலைமன்னார் ஆகிய இடங்களுக்கான இரவு தபால் ரயில்கள் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் நேரத்தில் எதிர்வரும் 12-ம் திகதியிலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வேப்பகுதி அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு புறப்படும் நேரம் இரவு 7 30 திருகோணமலை கிளை கல்லோயாவிலிருந்து பிரியும் நேரம் காலை 2.45 தலைமன்னார் இரவு 8.00

புதுவருடத்தை யொட்டிய மட்டக்களப்புக்கான விசேட ரயில் 12-ம் திகதி கொழும்பிலிருந்து இரவு 10 45க்குப் புறப்படும். 15-ம் திகதி விசேட ரயில் மட்டக்களப்பிலிருந்து மாலை 5 30 க்குப் புறப்படும்.

## இப்பதவி இனி இல்லை

வடக்குக் கிழக்குப்பகுதிகளில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பதவிகள் இல்லாதொழிக்கப்படவுள்ளன. இனி ஒரு மாவட்டத்திற்கு ஒரு கல்விப்பணிப்பாளர் மட்டுமே இருப்பார். இம்மாதம் நடுப்பகுதியிலிருந்து இத்திட்டம் அமுலுக்கு வரும். இதற்கமையத் தற்போது பிரதிக் கல்விப்பணிபபாளர்களாகக் கடமை புரிபவர்கள் வேறு பதவிகளுக்கு மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

## இவர்கள் பதவி பறிபோகும்

வடக்குக் கிழக்கு மாகாணசபையில் கடைசிக்காலத்தில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களில் தகுதியற்றவர்கள் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளனர். மார்ச்மாதம் முதலாம் திகதிக்கும பன்னிரெண்டாம் திகதிக்கும் இடையில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப் பட்டவர்களே பதவி நீக்கம் செய்யப்படவுள்ளனர்.

## சமாதான 'பெரகர'

மே மாதம் 10-ம் திகதி வவுனியாவில் மாபெரும் சமாதான பெரகர ஊர்வலம் நடாத்த வன்னி சமாதான குழுத் தலைவரும், வவுனியா கண்டி வீதி பௌத்தவிகாரை பிரதம பிக்குவுமான வண. சீயம்பலகஸ்வவ விமலசாரதேரோ ஏற்பாடுகளை செய்து வருகின்றார் வவுனியாவில் உள்ள சகல மதங்களைச் சேர்ந்த பெரியார்களும், சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ ரி ஆரியரட்ணவும், பொதுமக்களும் இந்த ஊர்வலத்தில் பங்குகொள்வார்கள் என மேற்படி பிக்கு முரசொலிக்கு தெரிவித்தார் ஊர்வலம் - மூன்று முறிப்பு பிள்ளையார் கோவிலிலிருந்து ஆரம்பமாகி வவுனியா நகர் ஊடாக கந்தசுவாமி கோவில் சென்று பின்னர் வவுனியா பௌத்த விகாரையில் முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது இந்த ஊர்வலத்தில் தமிழ், சிங்கள, கலாச்சார பேரணிகளும் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (11)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# மக்களை சாகடிக்கவா இப்படியொரு 'விற்பனை'

ஆசிரியர்
முரசொலி

சாவகச்சேரி ப நோ. கூ. சங்கத்திலே 852.40 சதம் கொடுத்து ஒருமூட்டை மா வாங்கினேன் சாப்பட்டிற்குப் பயன்படுத்த முடியாத பழைய இருப்பு மா. அதற்குள்ளே இருக்கின்ற புழுவும் வண்டும் கணக்கிலே அடங்காது. மயிர் முளைத்த புளுக்கள் எல்லாம் இருக்கின்றன. அப்படியே மாவைக்கொட்டிவிட்டு சாக்கை மட்டும் எடுத்துப் பாவிக்கக் கூடியதாக இருக்கின்றது. என்போன்ற கஷ்டப்பட்டவர்கள் 852.40 சதத்தை உழைக்க எத்தனை நாட்கள் பிடிக்கும் இந்த மாவைச் சாப்பிட்டால்வருத்தம் வருவது மட்டுமல்ல உயிரே உடனடியாகப் போய்விடும் போலத் தெரிகின்றது. இந்த மாவை விற்பனை செய்யாமல் தடுத்து நல்ல மாவை விற்பனை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மட்டுவில் — S பாலசிங்கம்

# தட்டெழுத்தாளர் நியமனத்தில் முன்னுரிமை கிடைக்குமா?

ஆசிரியர்
முரசொலி

வேலை நியமனங்கள் போட்டிப் பரீட்சை வைத்து அதில் சித்திபெற்றவர்கட்கே வழங்கப்படும் என்று பொதுசனத் தொடர்பு சாதனங்கள் கூறுகின்றன. நான் மாகாண சபை தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 21-12-89 — 23-12-89 வரை நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குப் சென்று வந்தேன். எனக்கு இன்னும் நியமனம் வழங்கப்படவில்லை. இனிமேல் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது எங்களுக்குப் பதவி நியமனம் வழங்கப்படுமா? இது பற்றி அறிவதற்கு எமக்கு பத்திரிகைகள் தான் உதவி செய்ய வேண்டும் ஆகவே இக்கடிதத்தை தங்களது பத்திரிகையில் பிரசுரித்து எனக்கும், என்னைப் போன்றவர்கட்கும் பதவி நியமனம் கிடைக்க உதவி செய்யுமாறு கொள்கிறேன்.

யாழ்ப்பாணம் — செல்வி சிவலிங்கம்

## பரீட்சை மீளாய்வு

# பிந்திக்கிடைக்கும் விண்ணப்பம் ஏற்கப்பட மாட்டாது

நடந்து முடிந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மீள்பரிசிலனை செய்யக்கோரும் விண்ணப்பப்படிவங்கள் தாமதமாகக்கிடைத்தால், அவை நிராகரிக்கப்படும்.

இவ்விதம் காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களால், பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதி பெற்றுள்ள மாணவர்களின் பரீட்சைப் புள்ளிகளைத் துரிதமாக வழங்குவது தடைப்படுகின்றபடியினாலேயே, அவ்விண்ணப்பப்படிவங்களை நிராகரித்து விடுவதெனப் பரீட்சைத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

## அன்னை பூபதிநினைவாக

# திலீபன் மரணித்த இடத்தில் இன்று உண்ணாவிரதம் ஆரம்பம்

தியாகச்சுடர் அன்னைபூபதியின் இரண்டாவது வருட ஞாபகார்த்தத்தை முன்னிட்டு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று சுழற்சி முறையிலான உண்ணாவிரதம்மேற்கொள்ளப்படவுள்ளது.

நல்லூர் பின்வீதியில் தியாகி திலீபன் மரணித்த இடத்துக்கு அருகாமையில் இன்று பத்தாம் திகதிகாலை இந்த உண்ணாவிரதம் ஆரம்பித்து வைக்கப்படும் நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, கந்தர்மடம், இருபாலை, நல்லூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களால் மேற்கொள்ளப்படும் இந்த சுழற்சி முறை உண்ணாவிரத ஆரம்ப வைபவத்தில் தமிழீழவிடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் உரை நிகழ்த்தவுள்ளதாக கோண்டாவில் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் திரு ரங்கன் தெரிவித்தார் (41)

# முரசொலி வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

'முரசொலி' ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடத்தப்படும் உதை பந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு சென் நீக்கிலஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து தொடர்மாடி விளையாட்டுக் கழக அணியும், பி ப 4 மணிக்கு சென் மேரிஸ் வெள்ளை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் விளையாட்டுக் கழக 'பி' பிரிவு அணியும் பி.ப 5 மணிக்கு யுத் காமல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. இப்போட்டிகள் யாவும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன. (16)

## தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் உறுதி

# வட, கிழக்கு கல்விப்பணிமனை தரம் பாதுகாக்கப்படும்

வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள சகல மாவட்டக் கல்விப்பணிமனைகளுக்கும் கல்விப் பணிப்பாளரை நியமிப்பதன் மூலம் மாவட்ட கல்விப் பணிமனைகளின் அந்தஸ்தை கல்விப் பணிப்பாளர் அலுவலக அந்தஸ்தை பாதுகாக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒருவருட காலமாக இக்கல்வி அலுவலகங்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தமையினால் அலுவலகத்தின் அந்தஸ்து குறைக்கப்பட்டதுடன் ஒழுக்காற்று நடவடிக்கை போன்ற பல நடவடிக்கைகளைக் கையாளும் அதிகாரங்கள் இவர்களுக்கு வழங்கப்படாமலிருந்தமையால் அதிபர்கள், ஆசிரியர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இவற்றை நீக்கும் பொருட்டு இக்கல்வி அலுவலகங்களுக்கு கல்விப்பணிப்பாளர்களை நியமியுங்கள் அல்லது ஆகக் குறைந்தது தற்போதய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களை பதில் கல்விப் பணிப்பாளர்களாக நியமனம் செய்யுங்கள் என இ. த. ஆ. ச. தூதுக்குழு அமைச்சின் முன்னாள் செயலாளர் கேர்ணல் குடலிகமவைச் சந்தித்து வலியுறுத்தியது.

சங்கத்தின் கோரிக்கை நியாயமானது என்பதை ஏற்றுக் கொண்ட அமைச்சின் செயலாளர் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய ஆறு மாவட்டங்களிலும் தற்போதிருக்கும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களை பதில் கல்விப்பணிப்பாளர் அல்லது மேலதிக கல்விப் பணிப்பாளர் என்ற அந்தஸ்துடைய பதவிக்கு உயர்த்தி இக்கல்வித்திணைக்களங்களின் தரத்தைப் பாதுகாக்க ஆவன செய்வதாகவும் அவர் உறுதியளித்தார்.

## மந்திகை வைத்தியசாலை

# மூடப்படும் நிலையில்; பிரான்ஸ் டாக்டர் கவலை

மந்திகை அரசினர் சுகாதார வைத்தியசாலை மூடப்படும் அபாய நிலையில் உள்ளதாக அங்கு பணிபுரியும் பிரான்ஸ் டாக்டரான செல்வி ஜக்குலின் தெரிவித்திருக்கின்றார்.

மேற்படி வைத்தியசாலையில் கடந்த மூன்று வருடமாக பிரான்ஸ் அரசின் அனுசரணையுடன் ஊழியம் செய்யும் டாக்டர் ஜக்குலின் போராட்டக் காலங்களில் வடமராட்சி மக்களுக்குப் பெரும் சேவையாற்றியவர். யுத்தகளத்திற்கு நேரிற் சென்று அரைகுறை உயிராகக் கிடந்த பலரைக் காப்பாற்றியும், பல சடலங்களை மீட்டும் மக்களுக்குப் பெரும் சேவை செய்தவர்.

டாக்டர் ஜக்குலின் மந்திகை வைத்தியசாலையில் செய்தியாளர்களைச் சந்தித்து மந்திகை வைத்தியசாலையின் குறைநிறைகளைக் கூறியதுடன் நேரிலும் காண்பித்தார்.

இரு வைத்தியர்களுடன் அரைகுறைச் சேவையுடனும் இங்கு இயங்கிவரும் வைத்தியசாலை எந்த வேளையிலும் மூடப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மருந்துத் தட்டுப்பாடும், வைத்தியர் தட்டுப்பாடும் அண்மையில் பெரும் மோசமாகப் பாதிப்பை வைத்தியசாலைக்கு ஏற்படுத்தியுள்ளது.

நோயாளர்கள் பெருமளவில் அரைகுறை நோய்களுடன் யாழ், கொழும்பு போன்ற வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

இது விடயமாக யாழ். சுகாதாரத் திணைக்களம் கொழும்பு சுகாதார அமைச்சு போன்றவற்றிற்கும் முறைப்பாடு செய்தும் பிரயோசனமில்லாதிருப்பதாகவும் அவர் சொன்னார். (39)

### சித்தாந்தப் பேராசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தப் பேராசிரியர் பதவியொன்றினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அறக்கட்டளை ஒன்று தொடக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியத்தின் இலக்கு 15 இலட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது'

### மீளாய்வு விண்ணப்பம்

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்வதற்காக இதுவரை 11,000 பேர் விண்ணப்பித்துள்ளார்கள்.

இவர்களிற் பெரும் பான்மையானோர் பாடசாலை விண்ணப்பதாரிகளாகும். இவர்களுக்குரிய மீளாய்வு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் திரு ஆதர் வத்தரமுல்லை தெரிவித்துள்ளார்.

### கோண்டாவிலில் கோழித் திருட்டு

கோண்டாவில் பகுதியில் அண்மைக் காலமாக கோழித் திருட்டு பரவலாக இடம் பெற்று வருகின்றது. இதனால் கோழி வளர்ப்பாளர்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளதுடன்; "பலநாள் கள்ளன் ஒரு நாள் அகப்படுவான்" என்ற நம்பிக்கையுடன் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (41)

### கட்டாக்காலிகள் அழிக்கப்படும்

மக்களுக்கு எந்த வகையிலும் பயன் இல்லாதமுறையிலும் பொதுமக்களின் சுகாதார வாழ்வுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் யாழ்ப்பாணப் பகுதியில் அலைந்துதிரியும் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளை யாழ்மாவட்ட உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் எடுத்துவருகின்றனர்.

மக்களால் பராமரிக்கப்படாது அனாதரவான பல ஆயிரக்கணக்கான நாய்கள் நடமாடுவதாகவும் இவற்றால் பல வகையிலும் மக்களின் சுகாதாரமும் கால் நடைகளின் சுகாதாரமும் பாதிக்கப்படக்கூடிய நிலை உருவாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## சுவையான செய்திகள்

### கொடூரமானதையற்காரன்

பாரதப்பேரரசன் ஜெகன்கிரின் மூத்தமகன் இளவரசன் குஸ்ராவ்(1587 1622) தனது கண் இமைகளை ஊசியும் நூலும் கொண்டு தைத்தான்.

இளவரசன் தனது தந்தையின் ஆட்சிக்கு எதிராக புரட்சி செய்தமையால் அவனது தந்தையாலேயே, அவன் கண்பார்வை இல்லாமல் இருக்க வேண்டும்என்ற தண்டனைக்கு உட்படுத்தப்பட்டான. இதன் பிரகாரம் ஒரு நீண்ட ஊசியும், ஒரு ஒளிப்பந்தமும் ஒரு தண்டனை நிறைவேற்றுபவனும் ஒழுங்கு செய்யப்பட்டன. தண்டனை நிறைவேற்றுபவன் எவ்வாறு சூடான ஊசியை கண் இமையில் புகுத்தி தைக்கவேண்டும் என்பதனை விளக்கினான். கண்தைக்கப்பட்ட இளவரசன் ஒரு அறையில் விட்டு பூட்டிவைக்கப்பட்டான். ஒருவருடத்தினுள் தனது கொடூரமான மனிதாபினமானம் அற்ற தண்டனையால் மனமுடைந்த பேரரசன் ஜெகன்கிர் சிறந்த சத்திரசிகிச்சை நிபுணர்களின் உதவியுடன் தனது மகனின் கண்பார்வையை பழைய நிலைமைக்குக் கொண்டுவந்தான். இளவரசன் மீண்டும் பார்வை பெற்று இனிதாக வாழ்ந்தான். இளவரசன் குஸ்ராவ் அழியாப் புகழ் பெற்ற தாஜ்மகாலினை கட்டிய பேரரசனின் சகோதரன்.

### "கான்..கா..ரூ"

ஒரு அவுஸ்திரேலிய நாட்டவனிடம் ஒரு அன்னியன் ஒரு மிருகத்தினை சுட்டிக் காட்டி அதன் பெயர் என்ன என்று வினவினான். அதற்கு அந்த அவுஸ்திரேலியன் "கான்...கா..ரூ" என்று கூறினான். அதாவது அந்த அவுஸ்ரேலியன்; "நான் விளங்கிக்கொள்ளவில்லை" என்று கூறினான் தனது பாசையில் அதுவே பின அந்த மிருகத்தின் பெயர் ஆக வழங்கப்படுகின்றது.

### விளையாட்டாக ஒரு 'பறப்பு'

மின்னி மூடி என்ற 2 வயது அமெரிக்கச்சிறுமி ஒருநாள் கடற்கரை யோரத்தில் ;30 விளையாட்டு பலூன்களை ஒன்றாக தனது இடுப்பில் கட்டி விளையாடிக் கொண்டு இருந்தாள். திடீர் என்று அவள் 50 அடிஉயரத்திற்கு பலூன்களினால் வளியில் இழுத்துச் செல்லப்பட்டாள். பின்பு மெச்சிக்கோ வளை குடாவில் நின்ற கடற்படையினரின் உதவியினால் அவள் சென். ஜேசப்தீவில் தரையில் இறக்கப்பட்டாள்.

## பிரயாண ஒழுங்குகள்

★ ஜேர்மனி

★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

★ ஈராக் (அரசாங்க வைத்தியசாலை)

ஈராக் நாட்டுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | | | சம்பளம் |
|---|---|---|---|
| 01. | ஆங்கில வைத்தியர் | — (2) | I. D 250 |
| 02. | ஆண் தாதி (மேல் நேர்ஸ்) | — (4) | I. D 140 |
| 03. | தொழிலாளர் | — (40) | I. D 80 |

5வருட ஒப்பந்தம் உணவு இருப்பிடம் வைத்தியம் இலவசம்

**V.T.R. TRAVELS**
41, 3rdCross Street Jaffna:

04042


150பேர் துடித்து, கருகி மாண்டனர்

# கப்பலிற் பெருந் தீ மூண்டதற்கு காரணம் திட்டமிட்ட சதி?

நெதர்லாந்துக் கப்பல் விபத்து சதிச் செயலாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். கப்பல் கப்டனை அவர்கள் தீவிர விசாரணைக்குட் படுத்தியுள்ளனர்.

நெதர்லாந்துப் படகுப் பாதைக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட இத்தீ விபத்தில் குறைந்தது 150 பேர் மரணமாகியுள்ளனர் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

சென்ற சனிக்கிழமை இரவு மேற்கு சுவீடனுக்கருகில் இச்சம்பவம் நிகழ்ந்தது கப்பல் நோர்வேயில் இருந்து டென்மார்க்கிற்குச் சென்றுகொண்டிருந்தபோதே தீப்பிடித்துக் கொண்டது.

தீப்பிடித்த கப்பல் சுவீடனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆயினும் தொடர்ந்து தீப்பற்றி எரிவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலில் 465 பேர் பயணம் செய்தனர். என்றும் கப்பல் மாலுமிகள் உட்பட குறைந்தது 314 பேர் காப்பாற்றப் பட்டனர் என்று நோர்வே அதிகாரிகள் கூறினர்.

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப்பின் ஐரோப்பாவில் நிகழ்ந்த மிகப் பெரும் கப்பல் விபத்து இதுவென வர்ணிக்கப்படுகின்றது.

## ரமழான் சிந்தனைகள்

### பெற்றோரை கடுமையான பார்வையில் பார்க்க வேண்டாம்

ஹஸன் (ரலி) அவர்களிடம் ஒருவர், "பெற்றோருக்கு மாறு புரிவதென்றால் என்ன?" என வினவினார்கள் 'உன் செல்வத்தை விட்டு அவர்களை அப்புறப்படுத்தி வைப்பதும்,பழக்க வழக்கத்தைவிட்டு ஒதுங்கி இருப்பதும், அவர்களை கடுமையான பார்வையில் பார்பதும் பெற்றோருக்கு மாறுபுரிவதில் அடங்கும்' என்பதாக பதில் அளித்தார்கள் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் நாயகம்சல் அவர்களின் சமூகத்தில் ஒருவர் வந்தார் அவருடன் ஒரு வயோதிபரும் வந்தார். அவரிடம், 'இப்பெரியார் யார்?' என்று நாயகம் (ஸல்) அவர்கள் வினவ, 'இவர் என் தந்தை' என்று கூறினார். 'நீர் அவருக்கு முன்னால் நடக்காதீர்; அவர் அமர்வதற்கு முன் அமராதீர்; அவரின் பெயரைச் சொல்லி அழைக்காதீர் அவரைக் குறை கூறாதீர்' என்று நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அறிவுரை பகர்ந் தார்கள்.

## முகாபே மீண்டும் தெரிவு

ஸிம்பாப்வே பிரதமராக திரு.றொபேட் முகாப்பே மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனையொட்டி பாரதப் பிரதமர் திரு வி.பி.சிங் அவருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான நட்புறவு இதன் மூலம் தொடர்ந்து வலுப்பட நல்ல வாய்ப்பு உண்டு என திரு. சிங் இச் செய்தியில் கூறியுள்ளார்.


## குகன் ஸ்ருடியோ

பருத்தித்துறை நகரில்

கடந்த 6-ம் திகதி வெள்ளிக்கிழமைமுதல் குகன் ஸ்ருடியோ தனது பழைய இடத்தில் (துறைமுக அண்மையில்) இங்குகின்ற தென்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

குகன்

பிரதான வீதி
பருத்தித்துறை

04082



## "தொழிற் பயிற்சிகள்"

★ COMPUTER PROGRAMMING & DATA PROCESSING IN BASIC LANGUAGE

60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்.

★ றேடியோ, ரெலிவிஷன் வீடியோ டெக் றிப்பயறிங்

ரெலிவிஷன், றேடியோ, வீடியோ டெக், திருத்தும்முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் : 4 மாதம்

★ ENGINEERING DRAWING

பொறியியல் பீடமாணவர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

★ றீவைண்டிங்

மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

★ எலெக்றிக்கல் வயறிங்

வீட்டுமின்சாரவேலை,மின்சாரப்பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்
காலம்-: 2 மாதம்

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP

காலம் 4 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 11.04.90 [கிழமை நாட்கள்]
15.04.90 [சனி, ஞாயிறு]

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி,(றெயில்வேகட்டவை அருகாமையில்) யாழ்ப்பாணம்

031406 04069



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



## பரதநாட்டிய அரங்கேற்றம்



செல்வி அற்புதராணி கந்தசாமி

சாவகச்சேரி திலகநர்த்தனாலய மாணவியான செல்வி அற்புதராணி கந்தசாமி அவர்களின் பரதநாட்டியஅரங்கேற்றம் நாளை 11-4-1990 புதன்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது இவர் திருமதி யசோதரா விவேகானந்தனின் மாணவியாவார்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவன்கோயில் ஒழுங்கை
சாவகச்சேரி

வ. கந்தசாமி

04086

யாழ். மாவட்டத்தில்

# மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள்களால் ஏற்படும் விபத்துகள் அதிகரித்துவருவதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த நான்கு நாட்களில் யாழ் போதனா வைத்தியசாலையில் 14க்கும் மேற்பட்டோர் மோட்டார் சைக்கிள் விபத்தினால் காயமடைந்து அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் ஒரு ஆறுவயதுச் சிறுவன் மரணமடைந்துள்ளான்.

நேற்றைய தினம் யாழ் நகரப் பகுதியில் க நடராசா (57) வி கருணாதேவி (50) ஆகிய இருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

அத்துடன் யாழ் மாவட்டத்தின் மற்றைய பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள்களினால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்து வருவதாக எமது நிருபர்களிடம் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# நினைவுச் சின்னங்கள் அமைப்பது குறித்து விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை

மறைந்த புலிகளின் உறுப்பினர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது குறித்து விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு தமிழீழ மக்கள் நிலையான நினைவுச் சின்னங்களை அமைக்க விருப்புற்றிருக்கிறார்கள்,

நாளைய தமிழீழத்துக்கும் வழிகாட்டிகள் இவர்களேஎன்பதால் இந்த மாவீரர்களின் நினைவைப் போற்ற வேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாகவே உள்ளோம்.

ஏறக்குறைய 1400 விடுதலைப்புலிகள் இது வரை வீரமரணமடைந்தார்களே - இவர்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழீழ மண்ணில் உயிர் நீத்த விடுதலைப் புலிகளுக்கு இன்று தனித்தனியாக நினைவுச்சின்னங்கள் எழுப்பும் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன

பல நினைவுச் சின்னங்களுக்கு சிந்தலய் சிதறலாய் செலவு செய்யும் பணத்தை எல்லா வீரவேங்கைகளையும் நினைவு கொள்ளும் விதத்தில் ஒரு நினைவு மண்டபமாய் - நினைவுச் சின்னமாய் எழுப்பப் பயன் படுத்துதல் நன்றல்லவா? அதுமட்டுமல்ல நகர்ப்புறங்களில் நெரிசலான இடங்களில் தெருச் சந்திகளில் நினைவுத் தூபிகள் நடப்படுகின்றன பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் தொல்லை என்றால் அதற்கான பொறுப்பையும் எமதியக்கமே ஏற்க வேண்டியுள்ளது எனவே தான் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு நினைவுச் சின்னங்களை அமைக்க விரும்புவோர் அனைவரையும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைமைச் செயலகத்துடன் தொடர்பு சொள்ளுமாறு தலைமைச்செயலகம் கேட்டுள்ளது;

# யாழ் நகரில் இம்முறை புதுவருட வியாபாரம்

யாழ்நகரில் என்றுமில்லாதவாறு இம் முறை புதுவருட விற்பனை அமோகமாக இடம் பெற்று வருகின்றது.

சிங்கள வியாபாரிகள் இம்முறை யாழ்நகருக்கு வந்து வியாபாரம் செய்வது குறிப்பிடத்தக்கது.

மக்களும் மகிழ்ச்சியுடன் தமது தேவைகளை நிறைவேற்றிவருகின்றார்கள்.

# வடபகுதி மாணவர்கள் தென்பகுதிகளுக்குச் சுற்றுலா

பாடசாலைத்தவணைவிடுமுறையைக் கழிப்பதற்காக வடபகுதியில் உள்ள பல மாணவர்கள் தென்பகுதிகளுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர்

தற்பொழுது ஏற்பட்டுள்ள அமைதி நிலையினாலே வடபகுதி மாணவர்களும், இளைஞர்களும் தென்பகுதிகளுக்கு சுற்றுலா மேற்கொண்டு படையெடுத்துள்ளார்கள்.

நீண்டகாலத்தின் பின்னர் இலங்கையின் சகல பாகங்களுக்கும் சுற்றுலாவை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளதாக சுற்றுலா செல்வோர் தெரிவிக்கின்றனர். (03)

# கொலைசெய்யப்பட்ட பின் சடலம் கோடரியால் துண்டு

(கீரிமலை)

விழிசிட்டியைச் சேர்ந்த சூரியர் நேற்று முன்தினம் மாலை உலக்கையால் அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

உலக்கையால் அடித்துக் கொலைசெய்யப்பட்டபின் இவரது சடலம் கோடரியால் கைவேறுகால்வேறாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தகராறு காரணமாகவே இக் கொலை இடம் பெற்றுள்ளது. சந்தேகநபரை விடுதலைப் புலிகள் அழைத்துச் சென்றுள்ளனர்.

## நோன்பு...

வேற்ற சந்தர்ப்பம் கிடைக்கும் பெரும்பாலான மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்கு சென்று கஷ்டத்துடனே பரீட்சை எழுதியுள்ளார்கள்.

நோன்பையும் விடமுடியாது எதிர்காலப் பாதையின் அடிக்கல்லான பரீட்சையையும் விடமுடியாது முஸ்லிம் மாணவர்கள் தவிக்கின்றனர்.

## யாழ் நகரில்...

பரீட்சைத்திணைக்களம் இவர்களை அழைத்துள்ளது யாழ் நகரில் ஐந்து நிலையங்களில் விடைத்தாள் புள்ளியிடும் பணி நடைபெறவிருக்கிறது. (40)

## அரசு...

அவகாசம் கொடுத்துள்ளோம் எனவும் அவர்கள் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

முன்னர் கொழும்பில் வடகிழக்கு மாகாணசபையைக் கூட்டுவதற்கு ஈ,பி, ஆர் எல். எப் முயற்சிப்பதாகத் கொழும்பில் செய்தி வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆங்கிலப் பத்திரிகை...

டிருந்தது.

இத்தகைய செய்திகள் விஷமத்தனமான நோக்கத்துடனேயே வெளியிடப்பட்டிருக்கின்றன என டொமினிக் குறிப்பிட்டார்.

## புலிகள் குழு...

கொண்டனர்.

நேற்றைய பேச்சுவார்த்தைகளின் போது ஆறுவது அரசியல் திருத்தச்சட்டத்தை நீக்கல் முக்கிய விடயமாக விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய பேச்சுக்களை தொடர்ந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிக்குழுவினர் இன்று ஜனாதிபதி பிரேமதாஸவை உத்தியோகபூர்வமாகச் சந்தித்து பேச்சுக்களை நடாத்துவார்கள் என செய்திகள் தெரிவிக்கின்றன நாளைய ஜனாதிபதியுடனான சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவும் கருதப்படுகிறது.


## உதவிவைத்திய அதிகாரிதேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல தனியார் வைத்தியசாலைக்கு அனுபவம்மிக்க உதவிவைத்திய அதிகாரி (R. M. P.) உடன் தேவை, ஞாயிறு தவிர்ந்த நாட்களில் தகைமைகளுடன் நேரிற் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி
லக்ஷ்மி வைத்தியசாலை
கிளிநொச்சி

04103


புத்தாண்டு காலத்தில்

# பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படுகின்றன

புத்தாண்டு தினத்தையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலத்தில் குழப்பத்தை ஏற்படுத்தச் சில விஷமச் சக்திகள் திட்டமிட்டு வருவதாகப் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதையடுத்து இந்த உஷார் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வகையில் விழிப்புடன் இருந்து தம்முடன் ஒத்துழைக்குமாறு பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# அன்னை பூபதி நினைவாக வேலணையில் உண்ணாவிரதம்

தமிழ் அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவாக நேற்றைய தினமான 9-ம்திகதி திங்கட்கிழமை வேலணை கிழக்கு வீரபத்திரர் கோவிலடியில் உண்ணாவிரதம் அனுட்டிக்கப்பட்டது.

அன்று காலை வேலணை கிழக்கு மாதர் சங்கத் தலைவி திருமதி தி. பத்மாவதி தலைமையில் இந்த உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது,

பெருந்தொகையான பெண்களும், ஆண்களும், சிறுவர்களும் இந்தஉண்ணாவிரதத்தில் கலந்துகொண்டனர், மாலையில் பொதுக்கூட்டமொன்றும் நடைபெற்றது. (19

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு உரம்பெற வட்டியில்லாக் கடன்

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு நெற்செய்கைக்காக, உரம் பெறுவதற்கு மக்கள் வங்கி விவசாய ஒளகாவின் சிபார்சில் வட்டியில்லாக் கடன் வழங்கவுள்ளது,

இத் திட்டம் ஐந்து ஏக்கருக்கு மேல் நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு வெகு விரைவில் வழங்கப்படவுள்ளது.

விவசாய அறிமுக அட்டை பெற்றுள்ள விவசாயிகள் கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளருடன் தொடர்புகொண்டு கடனுக்கு விண்ணப்பிக்கலாம்.

கடன் திட்டத்தால் பல்லாயிரக்கணக்கான இம் மாவட்ட விவசாயிகள் பயன்பெறுவர் என்று மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எஸ். லோகநாதன் தெரிவித்தார். (35)

# இலங்கைத் தொழிலாளர்கள் மலேசியாவில் தவிப்பு

வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி மலேசியாவிற்கு அழைத்து வரப்படும் நூற்றுக்கணக்கான இலங்கைத் தொழிலாளர்கள் அங்கு தவிக்கவிடப்படுவதாக அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்போது இலங்கையர்கள் விசாவின்றி மலேசியா செல்ல முடியாது பெருமளவு பிரசாரமின்றி இந்த முடிவு அமுல் செய்யப் பட்டிருப்பதால் கோலாலம்பூர் விமான நிலையத்தில் விசாவின்றி வரும் இலங்கயர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

சிங்கப்பூரில் சட்ட விரோத வெளிநாட்டு தொழிலாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்ட பின்னர் மலேசியாவிற்குத் தொழிலாளர்களை சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லும் முயற்சிகள் அதிகரிக்கப் படபடுள்ளன.

இந்த விவகாரம் குறித்து மலேசிய குடிவரவு அதிகாரிகளும் இலங்கை உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளும் கருத்துக்களை வெளியிட மறுத்துள்ளனர்.

## கூட்டுறவச்...

வது தவிர்க்கப் படவேண்டும்

இவ்வாறு யாழ்மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் டொமினிக் தெரிவிதுள்ளார். நேற்று நடைபெற்ற கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் அறிவைப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னணியின் யாழ்மாவட்ட அமைப்பாளர் ராஜன் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், முன்னணியின் வலிகாமப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் செயலகக் கூட்டுறவு மையப் பொறுப்பாளர் அருண்மாஸ்டர் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## தமிழக...

மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களைச் சந்தித்து நடைபெற்ற முழுவிபரங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இப்பிரச்சினை குறித்து சட்டசபையில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். ராதா 'தமிழக மீனவர்கள் இதுபோன்ற தொல்லைகளுக்கு ஆளாவதைத்தடுக்க மத்திய அரசுடன் பேசி மீனவர்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தைத் ரோந்துப் பணியில ஈடுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்' எனக் கூறினர்.

# கிணற்றில் விழுந்து சிறுவன் பலி

தண்ணீர் அள்ளும் போது கிணற்றில் தவறி வீழ்ந்து பன்னிரெண்டு வயதுச் சிறுவனொருவன் மரணமடைந்துள்ளான். இப்பரிதாப சம்வந்திற்குரிய சிறுவன் வேலணை வடக்கைச்சேர்ந்தவராவர். (24)

# லொறி--சைக்கிள் விபத்து

மானிப்பாய் கட்டுடைச் சந்தியில் நடைபெற்ற லொறி சயிக்கிள் விபத்தில் தனித்தனி சைக்கிள்களில் சென்ற இருவர் காயமுற்றனர். இவர்களில் ஒருவரான கட்டுவர வாசி திரு க.செல்வராசா (50வயது) கடுமையாக காயமடைந்து யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (30)

## தினவரவு...

களுக்கு வழங்கப்பட்டன இதனால் மாணவர்களின் வரவினைக் கடதாசிகளிலேயே பதிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டது. இது குறித்து ''முரசொலி'' ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (40)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ், [பிறைவேட்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 10-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது